# மெட்ரோ ரயில் நிறுவனம் நடத்தும் புகைப்பட கண்காட்சி

**வரும் 19-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை நடைபெறுகிறது**

சென்னை

உலக புகைப்பட தினத்தை முன்னிட்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை புகைப்பட சொசைட்டியும் இணைந்து புகைப்படக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 19-ம் தேதி உலக புகைப்பட தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை புகைப்பட சொசைட்டியும் இணைந்து புகைப்படக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

வடபழனியில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 19-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி இக்கண்காட்சி நடைபெறும். அனுமதி இலவசம்.

மெட்ரோ ரயில் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், யார்டில் நடைபெறும் பராமரிப்புப் பணிகள், சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கப்படுவது, பருந்துப் பார்வையில் புகைப்படங்களாக எடுக்கப்பட்டு இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். இதற்காக, சென்னை புகைப்பட சொசைட்டியைச் சேர்ந்த 38 பேர் குழுவினர் பல்வேறு மெட்ரோ ரயில் நிலையங்களுக்குச் சென்று 100 புகைப்படங்களை எடுத்துள்ளனர்.

மேலும், 'ஷூட் மெட்ராஸ்' என்ற தலைப்பில் புகைப்படப் போட்டியும் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையின் இயற்கை அழகு, சென்னையின் கட்டிடக்கலை மற்றும் இரவில் சென்னையின் அழகு என்ற மூன்று தலைப்புகளில் புகைப்படப் போட்டியும் நடத்தப்படுகிறது. இதில் வெற்றி பெறுபவர்களின் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம்பெறும்.

மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.